RNI No. RUC 54650 / 88 Postal Regn No. TTN-155/2012-2014
Posted at Korampallam S.O. 628 101 On 24 & 27 of every month.


# Philio 2013

கிருபையின் ஊழியங்களின்

## இளைஞர் இனிய பெருவிழா

இடம்: காய்கனி மார்க்கெட் மைதானம்,
வ.உ.சி. கல்லூரி எதிரில், தூத்துக்குடி.

நாள்: 14.02.2013 வியாழன் (Valentine's Day)

நேரம்: மாலை 4.30 முதல் 8 மணி வரை

வெற்றிச்செய்தி:
அண்ணன்
**மோகன் சி. லாசரஸ்**



வாலிபர்கள், மாணவ, மாணவிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
மாணவ, மாணவியருக்கு தேர்வுக்கான வெற்றி ஆலோசனைகள்,
விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும்.
ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்

தொடர்புக்கு: 94432 89026, 94421 20257, 94435 28474, 94428 86122


To


**கிருபையின் ஊழியங்கள்**
ஆபிரகாம் நகர், பெரியநாயகபுரம்,
தூத்துக்குடி-628 101. தமிழ்நாடு.
போன்: 0461-2340768
website: www.graceministriesindia.org

**GRACE MINISTRIES**
Abraham Nagar, Perianayagapuram,
Tuticorin - 628 101. S.India.
Mobile: 94432 89026
email: graceministriesindia@gmail.com


GRACE MINISTRIES


# ஆத்தும ஆதாயகர்

ஆண்டு சந்தா ரூ. 50/–

ஜனவரி 2013

**கர்த்தராகிய நான்
நிர்மூலமானவைகளைக்
கட்டுகிறேன்...
பாழானதைப்
பயிர்நிலமாக்குகிறேன்.**

எசேக்கியேல் 36:36



**கிருபையின் ஊழியங்கள்**
நமது மிஷனெரிப் பணி மற்றும் சுவிசேஷ பணிப்பிரிவு

**ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கம்**
நமது சிறுவர், மாணவர், வாலிபர் மற்றும் சமூகப் பணி சிறப்புப் பிரிவு

**தேவனுடைய கூடார ஊழியங்கள்**
நமது ஜெப, சுவிசேஷ எழுப்புதல் பணிப்பிரிவு

*உங்கள் சகோதரனிடமிருந்து...*

கடந்த ஆண்டு முழுவதும் கண்மணிபோல் காத்து, கரம்பிடித்து நடத்தி, நம்மேல் தம் கண்ணை வைத்து ஆலோசனை சொல்லி, வழிநடத்தி வந்தவரும் திருத்தி, சீர்படுத்தி, நிலைநிறுத்தி, பயன்படுத்தினவருமாகிய தேவனுக்கு துதிகளையும், ஸ்தோத்திரங்களையும் ஏறெடுப்போம்.

புதிய ஆண்டிற்குள் தேவன் நம்மை பிரவேசிக்க செய்திருக்கிறார். நன்றியுள்ள இருதயத்தோடு, துதியோடு, ஸ்தோத்திரத்தோடு புதிய ஆண்டின் ஒவ்வொரு நாட்களையும் கடந்து செல்ல தேவன் கிருபை செய்வாராக.

கடந்த ஆண்டு முழுவதும் தேவன் ஊழியத்தின் பாதையில் போதுமானவராய் இருந்தார். எத்தனையோ பெலவீனங்கள் மிஷனெரிகளின் வாழ்க்கையில் வந்த போதும் தேவன் தாங்கி, பெலப்படுத்தி, சுகப்படுத்தி, வழிநடத்தினார். கடந்த ஆண்டு நமது மிஷனெரிகள் அநேகர் வியாதிப்பட்டனர். ஆனாலும் உங்களுடைய ஜெபம் அவர்களைத் தாங்கிற்று. பெலப்படுத்திற்று. உங்களுக்கு நன்றி சொல்லுகிறோம்.

ஊழியத்தின் தேவைகளையும் தேவன் கடனின்றி சந்தித்தார். ஊழியத்தின் பாதையில் கடன் வாங்கி செயல்படக்கூடாது என்ற நம்முடைய சிறிய அர்ப்பணிப்பை தேவன் பெரிதாய் அங்கீகரித்து கடந்த ஆண்டு முழுவதும் நடத்தினார். அதற்கு முந்தின ஆண்டுகளிலும் 1993 முதல் இதுவரை நடத்தி வந்துள்ளார். தேவனுக்கு மனதார தாழ்த்தி நன்றி சொல்லுகிறோம். தாங்கின உங்களையும் ஜெபங்களில் நினைத்து தேவனுக்கு உங்கள் நிமித்தம் ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறோம்.

புதிய ஆண்டின் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள். இப்புதிய ஆண்டின்இன்னும் புதிய எல்லைகளை தேவனுக்காய் சுதந்தரிக்க தேவன் கிருபைதர தேவன் நமது மிஷனெரிகள் 87 பேரையும் கிருபையாய் பயன்படுத்த, பாதுகாக்க உங்கள் ஜெபங்களில் தினந்தோறும் ஜெபியுங்கள். கடந்த ஆண்டுகளில் தேவன் நிமித்தம் நீங்கள் எங்களோடு ஒத்துழைத்ததுபோல தொடர்ந்து உங்கள் ஒத்துழைப்பை நாடுகிறோம். தொடர்ந்து உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

தேவன் இந்த ஆண்டில் நமக்குத் தந்த வாக்குத்தத்தமான கர்த்தராகிய நான் நிர்மூலமானவைகளைக் கட்டுகிறேன் என்றும், பாழானதைப பயிர்நிலமாக்குகிறேன் என்றும், அப்பொழுது உங்களைச் சுற்றிலுமுள்ள மீதியான ஜாதிகள் அறிந்து கொள்வார்கள்; கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன், இதைச் செய்வேன். எசேக். 36:36 இந்த வசனத்தை உங்கள் வாழ்விலும் குடும்பத்திலும் நிறைவேற்ற ஜெபிக்கிறோம்.

நீண்ட காலமாக மிஷனரி ஆலயம் கட்டப்பட தடைப்பட்டுள்ள அய்யனேரி, திருவேங்கடம் என்ற இரு கிராமங்களிலும் இவ்வாண்டில் அனுமதி பெற்றுக்கொள்ள தேவனிடத்தில் ஜெபியுங்கள். நமது மிஷனெரிகள் யாவரும் உங்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார்கள்.

உங்களுக்காக ஜெபிக்கும் சகோதரன்

**பா. பொற்செல்வன் ஆசீர்**

---

**மகிமையில் பரமனோடு**

சிப்பிப்பாறையைச் சேர்ந்த திரு. குணசேகரன் அவர்கள் மனைவி திருமதி.செல்வமணி (வயது 42) கடந்த 19.12.2012 அன்று மகிமையில் பிரவேசித்தார்கள். நமது ஊழியத்திற்காக ஜெபிக்கிற உழைக்கிற குடும்பத்தினர். கணவர் மற்றும் குடும்பத்தினர் ஆறுதலுக்காக ஜெபியுங்கள்.



# எனது புத்தாண்டு தீர்மானங்கள்

**S. ஜெபராஜ்** President, Grace Ministries

1. எனக்கு உரிமை இல்லாததை உரிமையாக்கத் துணியாமல், எந்தப் பாவமும், தேவனுக்கு விரோதமானது என்ற பயத்துடன், நடுக்கத்துடன் என் பரிசுத்தத்தை யோசேப்பைப் போல காக்கத் தீர்மானிக்கிறேன். ஆதி 39:12
2. யோபுவைப் போல, என் வாழ்வில் எந்த நிலைமையிலும், தேவனின் அதிகாரத்தை அங்கீகரித்து, எல்லாவற்றிலேயும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செய்யத் தீர்மானிக்கிறேன். யோபு1:21
3. தானியேலைப் போல, அது ராஜாவின் போஜனமானாலும் என்னை தீட்டுப் படுத்துமானால் (தேவனை விட்டுப் பிரிக்குமானால்) அதை விட்டு விலகி ஓட தீர்மானிக்கிறேன். தானி1:8
4. என்னுடைய உலக சமூக பெலத்தை நான் சார்ந்து கொள்ளாமல், தேவனையே, தேவனின் பெலத்தையே சார்ந்து கொண்டு, எந்த சூழ்நிலையிலும் தாவீதைப் போல தேவனுக்காய் நிற்கத் தீர்மானிக்கிறேன். 1சாமு17:45
5. மோசேயைப் போல, கர்த்தருடைய சமூகத்திற்குச் செல்ல அதிகாலமே எழுந்து, ஆயத்தமாகி அவர் சமூகத்தில் நிற்க தீர்மானிக்கிறேன். யாத்34:4,2
6. எஸ்தரைப் போல சொந்த ஜனத்தின் இரட்சிப்பிற்காக, விடுதலைக்காக ஜெபத்துடன் செயல்பட தீர்மானிக்கிறேன். எஸ்தர்4:14-16
7. ரூத்தைப் போல, இழப்பானாலும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் அடங்கியிருக்க தீர்மானிக்கிறேன். ரூத் 2:12
8. தீமோத்தேயுவைப் போல, முன்னோர்களின்-பெற்றோர்-நல் நடக்கை, விசுவாசம் போன்றவற்றை என் வாழ்வின் முன்மாதிரியாக நோக்கி பின்பற்ற தீர்மானிக்கிறேன். II தீமோத்1:5
9. ஸ்தேவானைப் போல, பகைப்போரையம், காயப்படுத்துவோரையும், எதிர்ப்போரையும் மன்னிக்க, அவர்களுக்காய் ஜெபிக்கத் தீர்மானிக்கிறேன்.அப் 7:60
10. அப்போஸ்தலர் பவுலைப் போல, கிறிஸ்துவுக்காக சுவிசேஷத்தினிமித்தம் பாடுகளை சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளத் தீர்மானிக்கிறேன். அப்21:13,20:24.
11. சாமுவேலைப் போல, கர்த்தருக்கும், மனுஷருக்கும் பிரியமாக நடந்து கொள்ளத் தீர்மானிக்கிறேன். Iசாமு2:26
12. இயேசு கிறிஸ்துவைப் போல, பாடுகளின் நடுவில் என்னை தாழ்த்தி, கீழ்ப்படிதலை கற்றுக்கொள்ள தீர்மானிக்கிறேன். எபி5:8 பிலி 2:8

# "அனுதினமும் ஆசீர்வாதம்"

Dr. P. செல்வராஜ், கோவை

ஒவ்வொரு நாளும் நாம் ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கை வாழவேண்டும் என்பது தேவனுடைய நோக்கமாகும். ஏப்போதோ என்றல்ல, அவ்வப்போது என்றல்ல, ஆண்டுதோறும் என்றல்ல, ஒவ்வொரு நாளும்! ஆதாம்-ஏவாளுக்கு அத்தகைய வாழ்க்கை அருளப்பட்டிருந்தது-தங்களுடைய கீழ்ப்படியாமையினால் அவர்கள் தங்கள் மேலும், தங்கள் வழியாக இவ்வுலகின் மேலும் சாபத்தை வருவித்துக்கொள்ளும்வரை, அருளப்பட்டிருந்தது. ஆனாலும், தேவனுடைய நோக்கம் மாறவில்லை.

தேவன் நோவாவை ஆசீர்வதித்தார் ஆதி9:1 ஆபிராமிடம் நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் என்றார்" ஆதியாகம்12:2 கலாத்திய திருச்சபைகளுக்குப் பவுல் எழுதிய மடலில் அவர் "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" என்று குறிப்பிட்டார் கலாத்தியர் 3:29. ஆபிரகாமுக்குக் உண்டான ஆசீர்வாதம் இயேசு கிறிஸ்துவினால் நமக்கு (புறஜாதிகளுக்கு) வரும்படியாகவும்... பெற்றிருக்கிறோம் கலாத்தியர் 3:14 இரட்சிப்பு கர்த்தருடையது: தேவரீருடைய ஆசீர்வாதம் உம்முடைய ஜனத்தின் மேல் இருப்பதாக என்று சங்கீதம் 3:8-ல் நாம் வாசிக்கிறோம். யோவான் 10:10-ல் இயேசு "திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்" நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன் என்றார். நானே நல்ல மேய்ப்பன் நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காய் தன் ஜீவனைக் கொடுக்கிறான். யோவான் 10:11

ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கையென்றவுடன் அறைகூவலே இராது என்பது பொருளல்ல. அத்தகைய வாழ்க்கையில் நாம் அறைகூவலை மேற்கொள்ளும் திறனடைகிறோம் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். நாம் வாழும் உலகம் நிலையற்றதும், மணலாலான அடித்தளத்தின் மேல் கட்டப்பட்டதுமாயிருக்கிறது. அறைகூவல் எப்போது வேண்டுமானாலும் வரலாம். அதனால் - அனுதின ஆசீர்வாதம் நமக்கு அவசியம். "தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே என்று 2கொரி. 1:20 கூறுகிறது. "நீங்கள் ஜெபம்பண்ண வேண்டிய விதமாவது" என்ற துவங்கி இயேசு கற்பித்த ஜெபத்தின் மையப்பகுதியில்" எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" எனும் வேண்டுதல் இடம்பெறுகிறது மத்தேயு6:11 இயேசு, தம்மோடு படகிலிருந்த சீடர்கள் புயலைக்கண்டு பயந்தபோது அவர்களிடம் "உங்கள் விசுவாசம் எங்கே?" என்று கேட்கிறார் லூக்கா8:25. படகு நீரால் நிரம்பிய அந்த சூழ்நிலையிலும்!

நம்பிக்கை தேவை. அதை நாம் அறிக்கை செய்ய வேண்டும். எதிர்மறையான அறிக்கையை நாம் தவிர்க்கவேண்டும். நம்முடைய அறிக்கை தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் இருக்கவேண்டும். தேவனுடைய ஆசீர்வாதம் நமக்கு உண்டு என்று வேதாகமம் கூறுகிறது. கர்த்தருடைய வார்த்தை நம்முடைய சிந்தனையில் வரவேற்கத்தக்க மாற்றத்தைக் கொண்டுவருவதாக!. வேதாகமத்தை வாசிக்க, வாசிக்க இவ்வுலகத்தின் குழப்பங்களுக்கு தேவனுடைய ஆசீர்வாதம் ஒரு தீர்வாகுமெனும் வெளிப்பாடு உங்களுக்குக் கிடைக்கும். அவ்வெளிப்பாட்டினால் உங்கள் வாழ்க்கையில் பெரியதோர் மாற்றம் ஏற்படும். ஆமென்!. ஆல்லேலூயா!!.



*வாக்குத்தத்தச் செய்தி*

# கட்டியெழுப்பி செழிப்பாக்கும் தேவன்.

**பா. பொற்செல்வன் ஆசீர்.**

கர்த்தராகிய நான் நிர்மூலமானவைகளைக் கட்டுகிறேன் பாழானதைப் பயிர்நிலமாக்குகிறேன். எசேக்கியேல்36:36.

கட்டுகிறவரும், நாட்டுகிறவருமாகிய தேவனும், செழிப்பாக்குகிறவரும், ஆசீர்வாதமாக்குகிறவருமாகிய நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு எங்கள் புதிய ஆண்டின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நமது மிஷனெரிகள் யாவரும் உங்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கிறார்கள்.

நமது தேவன் நெரிந்த நாணலை முறியாமலும் மங்கியெரிகிற திரியை அணையாமலும் நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துகிற தேவன் ஏசாயா 423.

இந்த தேவன் இந்த ஆண்டில் நம் ஒவ்வொருவரையும் பார்த்துச்சொல்லுகிறார். நான் உங்களைக் கட்டுவேன். நான் உங்களை கனிதரும், பலன் தரும் பயிர் நிலமாக்குவேன் என்பதாக.

இந்த வாக்குத்தத்தம் உங்கள் ஒவ்வொருவருக்கும் உரியது. இதை நீங்கள்தனிப்பட்ட முறையில் உங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்ளுங்கள்: ஜெபத்தோடு உரிமைப் பாராட்டுங்கள்: ஸ்தோத்திரத்தோடு உங்கள் வாழ்வில் பெற்று அனுபவியுங்கள் அல்லேலூயா!

உங்கள் வாழ்வின் பகுதிகளில் நிர்மூலமான எல்லைகள், பாழான பகுதிகள் காணப்படலாம். அதை குறித்து நீங்கள் கலங்க வேண்டிய தேவையில்லை காரணம் அவைகளைப் பார்த்து இரங்கி, மனதுருகி, நம்மைப் பார்த்து கர்த்தராகிய நான், நிர்மூலமானவைகளைக் கட்டுகிறேன் என்றும் பாழானதைப் பயிர் நிலமாக்குகிறேன் என்றும். அப்பொழுது உங்களைச்சுற்றிலுமுள்ள மீதியான ஜாதிகள் அறிந்து கொள்வார்கள்: கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன், இதைச் செய்வேன் எசேக்கியேல் 36:36 என்று சொல்லுகிறார்.

தேவன் நியாயாதிபதிகளின் புஸ்தகத்தில் பலமுறை நிர்மூலமான இஸ்ரவேல் தேசத்தை எழுப்பிக்கட்டுகிறதைப் பார்க்கிறோம்.
தேவன் ரூத்தின் சரித்திரத்தில் நிர்மூலமான குடும்பத்தை எழுப்பிக் கட்டுகிறதைப் பார்க்கிறோம்.

கர்த்தரோ உண்மையுள்ளவர்: அவர் சொன்னதை உங்கள் வாழ்வில் நிச்சயம் செய்வார். ரூத்தின் வாழ்வை, குடும்பத்தை கட்டி, எழுப்பி ஆசீர்வதித்த தேவன், செழிப்பாக்கின தேவன், நகோமியை ஆசீர்வதித்து மகிழ்ச்சியாக்கி செழிப்படைய செய்த தேவன், யோபுவை தேவன் திரும்ப கட்டி செழிப்பாக்கினவர் உங்கள் வாழ்விலும் செய்வார்.

இஸ்ரவேல் ஜனங்களை அவர்களை நிர்மூலமாக்கின எல்லா சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி விடுவித்து, கட்டியெழுப்பி ஆசீர்வதித்து நடத்தின தேவன் உங்களையும் அப்படியே கட்டியெழுப்புவார் ஆசீர்வதித்து பயிர்நிலமாக்கி, செழிப்பாக்குவார். விசவாசியுங்கள். விசுவாசத்தோட நியாயாதிபதிகளின் புஸ்தகம், ரூத்தின் சரித்திரம், யோபு ஆகிய மூன்று புத்தகங்களையும் வாசியுங்கள், தியானியுங்கள், அற்புதத்தைக் காண்பீர்கள்.

**மனந்திரும்பினால்:**

**நீ**ர் சர்வவல்லவரிடத்தில் மனந்திரும்பினால் திரும்பக் கட்டப்படுவீர். யோபு 22:23.

நம்முடைய வாழ்வில் தேவன் நம்மை திரும்பக் கட்ட நிபந்தனை நாம் மனந்திரும்ப வேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்களை தேவன் அவர்கள் சத்துருக்களின் கையினின்று பலமுறை விடுவித்த வரலாற்றை நியாதிபதிகளின் புத்தகத்தில் படிக்கிறோம்.

1. நியா3ஆம் அதிகாரத்தில் தேவன் இஸ்ரவேலரை மெசொப்பொத்தாமியாவின் ராஜாவாகிய கூசான்ரிஷதாயீம் கையின்று ஒத்னியேலை கொண்டு விடுவித்தார்-9வச
2. நியா3ஆம்அதிகாரத்தில் தேவன் இஸ்ரவேல் ஜனங்களை மோவாபின் ராஜாவாகிய எக்லோன் கையிலிருந்து ஏகூத் என்னும் இரட்சகனைக் கொண்டு விடுவித்தார். 14.15வச
3. நியா4ஆம்அதிகாரத்தில் இஸ்ரவேல் ஜனங்களை கானானியரின் ராஜாவாகிய யாபீன் கையினின்று பாராக், தெபொராள் என்பவர்களை எழும்பப்பண்ணி விடுவித்தார்.3-7வச
4. நியா6ஆம் அதிகாரத்தில் தேவன் இஸ்ரவேல் ஜனங்களை. மீதியானியர் கையினின்று கிதியோனை எழுப்பி, அவனைக் கொண்டு விடுவித்தார். 7-14 வச
5. நியா10,11அதிகாரங்களில் தேவன் இஸ்ரவேல் ஜனங்களை அம்மோன் புத்திரரின் கையின்று விடுவிக்க யெப்தாவை எழுப்பினார்; விடுவித்தார். 10:15,16:11:29.
6. நியா13ஆம் அதிகாரத்தில் தேவன் இஸ்ரவேல் ஜனங்களை பெலிஸ்தியர் கையினின்று விடுதலையாக்க சிம்சோனை எழுப்பினார். 25வச.

இந்த வரலாறுகளை நன்றாக கவனமாக படித்துப் பாருங்கள். இஸ்ரவேல் புத்திரர் பாவம்செய்தபோது, தேவனை மறந்து அந்நிய தேவர்களை தேடினபோது, அவர்கள் சத்துருக்கள் அவர்களை மேற்கொண்டு அவர்களை நிர்மூலமாக்கினார்கள்! பாழாக்கினார்கள்!

நீங்கள் நாள் பார்த்து, குறிகேட்டு செத்தவர்களிடத்தில் விசாரித்து, ஜோசியம் பார்த்து நன்மையை கண்டடையலாம் என நினைத்தால் அது நிச்சயம் சாபத்தைக் கொண்டுவரும்.



லேவியராகமம் 19:4,28-37 வசனங்களை வாசித்து மனந்திரும்புங்கள். விக்கிரகங்களுக்கு விலகுங்கள், அஞ்சனம், குறி கேட்குதல் வேசித்தனம். ஊண்மையில்லாத தொழில், வியாபாரம் இவைகள் பாவம் என்று கர்த்தர் சொல்லுகிறார், அவைகளை விட்டு மனந்திரும்ப வேண்டும்.

மனந்திரும்பும்போது தேவன் நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும், குடும்பத்தையும் திரும்பக் கட்டுவார். பிரிவினைகள் மாறும் இழப்புகள், நஷ்டங்கள் மாறிப்போகும். கர்த்தர் வாழ்வை பயிர் நிலம் போல், கனிதரும் வாழ்வாய் பலன் தரும் வாழ்வாய் ஆசீர்வதிப்பார்.

நாம் மனந்திரும்பும்படி இயேசுவை நோக்கிப்பார்க்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நமது பாவங்களை கழுவி சுத்திகரிக்கும் வல்லமை உள்ளது. இயேசு கிறிஸ்து உங்களை பாவத்தினின்று விடுவித்து. மன்னித்து ஆசீர்வதிப்பார்.

மனந்திரும்புங்கள் கட்டப்படுவீர்கள். மனந்திரும்புங்கள் தேவன் உங்களை பயிர்நிலம்போல் செழிப்பாக்குவார்.

மனந்திரும்பின நாம் கட்டப்பட, பயிர் நிலம் போல் தொடர்ந்து அசீர்வதிக்கப்பட விசுவாசிக்க வேண்டும், நம்மைத் தாழ்த்த வேண்டும், பிறரை மன்னிக்க வேண்டும்.

யோபுவைக் பாருங்கள்! யோபுவின் வாழ்வில் எத்தனை இழப்புகள். தனது சம்பத்து, பிள்ளைகள். வேலைக்காரர்கள் யாவரையும் இழந்து போனான். உயிரோடு இருந்து அவனுக்கு ஆறுதல் சொல்ல வேண்டிய மனைவி தேவனை தூஷித்து ஜீவனைவிட கூறுகிறாள். சிநேகிதர்கள் யோபுவை நீர் பாவியான மனுஷன் என்று யோபு:4.5,8,11,15,18,20,22,25,32,33,34,35,36.37 ஆகிய 15 அதிகாரங்களில் நியாயந்தீர்க்கிறதை காணமுடிகிறது. யோபுவின் வேதனை எவ்வளவாய் பெருகியிருக்கும் பாருங்கள்.

ஆனால் தேவன் யோபுவை இரண்டத்தனையாய் ஆசீர்வதித்தார். கர்த்தர் யோபின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார். யோபு42:10,12 காரணம் யோபுவின் விசுவாசம். தாழ்மை, மன்னிக்கும் குணம். நமது வாழ்விலும் காணப்பட்டால் தேவன் நம்மையும் திரும்ப கட்டுவார், பயிர்நிலமாக்கி ஆசீர்வதிப்பார்.

***விசுவாசித்தால் :***

தனது பாடுகள். இழப்புகள் நடுவில் யோபு தேவனை ஸ்தோத்தரிக்கிறார் யோபு1:21 கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்: கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்.

யோபு2:10 தேவனுடைய கரத்திலிருந்து வரும் யாவற்றையும் யோபு அங்கிகரிக்கிறார் ஆசீர்வாதத்தையும் இழப்பையும் கூட அங்கிகரிக்கிறார்.

நீ பயித்தியக்காரி பேசுகிறதுபோலப் பேசுகிறாய்: தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ என்றான்.

யோபு1:22,2:10,31:1 யோபு பாடுகளின் இழப்புகளின் நடுவிலும் தன்னை பாவத்திற்கு விலக்கிக் காத்துக் கொண்டான்.

இவையெல்லாவற்றிலும் யோபு பாவஞ்செய்யவுமில்லை, தேவனைப் பற்றிக் குறை சொல்லவுமில்லை.

இவைகள் எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவஞ் செய்யவில்லை.

என் கண்களோடே உடன்படிக்கை பண்ணின நான் ஒரு கன்னிகையின் மேல் நினைப்பாயிருப்பதெப்படி.

விசுவாச வாழ்வின் வெற்றியின் மூன்று அடிப்படைகளை யோபுவின் வாழ்வில் காண்கிறோம்.

1. எல்லாவற்லேயும் ஸ்தோத்திரம் செய்தல்.
2. தேவனை அங்கிகரித்தல்
3. பாவத்திற்கு விலகி, விலக்கி காத்துக்கொள்ளல்

இந்த யோபுவின் விசுவாசத்தைப் பாருங்கள் யோபு13:15 அவர் என்னைக் கொன்றுபோட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன். யோபு16:19 இதோ என் சாட்சி பரலோகத்திலிருக்கிறது, எனக்கு சாட்சிபகருகிறவர் உன்னதங்களில் இருக்கிறார்.

யோபு 19:25-27 என் மீட்பர் உயிரோடிருக்கிறார்... அவரை நானே பார்ப்பேன் அந்நிய கண்கள் அல்ல. என் கண்களே அவரைக் காணும்.

யோபு 23:2 அவருடைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் காத்துக்கொண்டேன். யோபு23:14 எனக்குக் குறித்திருக்கிறதை அவர் நிறைவேற்றுவார்: இப்படிப்பட்டவைகள் இன்னும் அநேகம் அவரிடத்தில் உண்டு யோபு42:2 தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர், நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்.

யோபு 14:4 அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்கத் தக்கவன் உண்டோ ஒருவனுமில்லை. யோபு17:9 நீதிமான் தன் வழியை உறுதியாய்ப் பிடிப்பான்: சுத்தமான கைகளுள்ளவன் மென்மேலும் பலத்துப்போவான்.

யோபுவின் விசுவாச அறிக்கைகள் எத்தனை பெலமுள்ளவைகள் பாருங்கள். நம்முடைய விசுவாசமும் இப்படிப்பட்டதாய் இருக்கும்போது தேவன் யோபுவின் வாழ்வை, குடும்பத்தை கட்டியெழுப்பி ஆசீர்வதித்தது போல் நம்மையும் ஆசீர்வதிப்பார்.

**தாழ்மையினால்**

தேவன் யோபுவின் வாழ்வில் அவனை திரும்ப கட்டினதின் இரகசியம் அவன் தன்னை தேவனுக்கு முன்பாக தாழ்த்தினான் யோபு40:4. அதோ நான் நீசன் நான் உமக்கு என்ன மறு உத்தரவு சொல்லுவேன் என் கையினால் என் வாயைப் பொத்திக்கொள்ளுகிறேன்.

யோபு42:3 அறிவில்லாமல் ஆலோசனையை மறைக்கிற இவன்யார்? ஆகையால் நான் எனக்குத் தெரியாததையும் என் புத்திக்கு எட்டாததையும் நான் அறியாததையும் அலப்பினேன் தாழ்மைக்கு தேவை மனந்திரும்புதல் யோபுவைப் பாருங்கள்.



யோபு40:5 நான் இரண்டொருதரம் பேசினேன்: இனிநான் பிரதியுத்திரம் கொடாமலும் பேசாமலும் இருப்பேன். யோபு42:6 நான் என்னை அருவருத்து தூளிலும் சாம்பலிலும் இருந்த மனஸ்தாபப்படுகிறேன்.

மனந்திரும்பாது தாழ்மை நம்மில் வராது. தாழ்மையைக் கற்றுக் கொள்ள நமது பிழைகளை உணரவேண்டும். சங்19:12 தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும்.

தன்னை தாழ்த்தின யோபு தேவனால் உயர்த்தப்பட்டார். இழந்தவை களையெல்லாம் திரும்ப இரண்டுமடங்காக பெற்றுக் கொண்டார். தேவன் அவரை அவர் குடும்பத்தை ஆவிக்குரிய வாழ்க்கையை ஆசீர்வதித்தார். செழிப்பாக்கினார்.

***பிறரை மன்னிப்பதால்:***

தேவனோடு உள்ள உறவு பெலனடைய. மேம்பட தேவை ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைகளுக்கும் மன்னிக்கும் சுபாவம். கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் கொலோ3:13 என்கிறது வேதம்.

யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்கிறான் யோபு 42:7,8,9,10 வசனங்களை வாசியுங்கள். யோபுவின் சிநேகிதர்களான எலிப்பாஸ், பில்தாத்து, சோப்பார் ஆகியோர் மேல் தேவனுடைய கோபம் மூண்டது. கர்த்தர் சொல்லுகிறார், நீங்கள் என் தாசனாகிய யோபு பேசினதைப் போல நீங்கள் என்னைக் குறித்து நிதானமாய் பேசவில்லை என்பதாக.

யோபுவினிடத்தில் போய் உங்களுக்காக தகனபலியிடச் சொல்லுங்கள்: யோபு உங்களுக்காக வேண்டுதல் செய்வான் என்கிறார். யோபு தன்னை நீர் பாவி, நீர் பாவஞ் செய்தீர், நீர் நீதிமான் அல்ல என்று நியாயந்தீர்த்த நண்பர்களை மன்னித்து அவர்களுக்காக வேண்டுதல் செய்கிறான்; மன்னிக்கும் இருதயம் இல்லாது எப்படி வேண்டுதல் செய்ய முடியும்? இவன் மன்னித்து வேண்டுதல் செய்ததால் தேவன் அவர்கள் புத்தியீனத்துக்குக் தக்க அவர்களை நடத்தவில்லை. மேலும் யோபு மன்னித்து விண்ணப்பம் செய்தபடியால் தேவன் யோபுவின் சிறையிருப்பை மாற்றினார். யோபு தன்னைப் பார்த்து நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் இருக்கிறீரோ? தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்று தனக்கு ஆலோசனை சொன்ன தனது மனைவியையும் மன்னித்து அங்கிகரிக்கிறான். அவனது துன்பத்தில் துணைநிற்க மறந்து போன மனைவி தேவன் அவனுக்கு கொடுத்த ஆசீர்வாதத்தில் பங்கு கொள்ளுகிறாள்.

துன்ப நாட்களில் பார்க்க வந்ததாக எந்த இடத்திலும் காணப்படாத அவனுடைய சகோதர, சகோதரிகள் மற்றும் அவனுக்கு அறிமுகமான அநேகர் அவனை வந்து சந்திக்கும் போது ஏற்றுக் கொள்ளுகிறான். குறை சொல்லி நில்லாது, குற்றம் சொல்லி நில்லாது அவர்களோடு போஜனம் பண்ணி தனது சந்தோஷத்தை அவர்களோடு பகிர்ந்துகொள்ளுகிறான். யோபு.42:11 மன்னிக்கும் இருதயம் இருந்தால் மட்டுமே இது முடியும் மத்தேயு6:12, லூக்கா11:4, மத்தேயு6:14,15, மத்தேயு18:35, மாற்கு 11:26

ஆகிய வசனங்கள் நான் தேவனால் மன்னிக்கப்பட நான் மற்றவர்களை மன்னிக்க வேண்டும் என்ற சத்தியத்தை நிலைநிறுத்துகிறது. இந்த மன்னிக்கும் குணம் யோபுவின் வாழ்வில் இருப்பதை காண்கிறோம்.

யோபுவின் வாழ்வு தேவனால் கட்டப்பட்டது அது பயிர் நிலம் போல் தேவனால் செழிப்பாக்கப்பட்டது. அதே தேவன் உங்கள் வாழ்விலும் உங்களை திரும்ப கட்டுவார். பயிர்நிலம் போல் செழிப்பாக்கி ஆசீர்வதிப்பார்.

இழப்பின் கசப்புகள் மாறும், நிர்மூலமானதின் காயங்கள் ஆறும் பாழாக்கப்பட்டதின் நிமித்தம் வந்த கண்ணீர் ஆனந்த களிப்பாய் மாறும். வாக்குத்தத்தம் செய்த தேவன் தமது வாக்கை மெய்யாகவே உங்கள் வாழ்வில் நிறைவேற்றி உங்களை மகிழ்ச்சியாக்குவார்.

மனந்திரும்புங்கள். விசுவாவியுங்கள்.
தாழ்மைப்படுங்கள். பிறரை மன்னியுங்கள்.

தேவன் தாமே இப்படிப்பட்ட கிருபைகளை இந்த புதிய ஆண்டில் தர உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

---

## ஃபிலியோ 2013 இளைஞர் இனிய பெருவிழா ஜெபக்குறிப்புகள்

1. 2013 பிப்ரவரி 13 அந்த நாளை தேவன் பொறுப்பெடுத்து எல்லா சூழ்நிலைகளையும் சாதகமாக மாற்றித்தர
2. கூட்ட நாளிற்கு முன்போ அந்த நாளிலோ எந்த அசம்பாவிதங்கள் (பந்த், கலவரம், மரணம் போன்றன) நடைபெறாதபடி தேவன் காத்துக்கொள்ள.
3. கூட்டத்திற்கு 15,000க்கு மேற்பட்ட வாலிப சகோதர, சகோதரிகளை தேவன் அழைத்து வர..
4. அநேக கிறிஸ்தவரல்லாத வாலிப சகோதர சகோதரிகள் கலந்து கொள்ள.
5. கூட்டத்தில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் யோவான்15:15இன்படி இயேசுவை தங்கள் சிநேகிதராக ஏற்றுக்கொள்ள.
6. செய்தியாளரை தேவன் (சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள்) வல்லமையாய் பயன்படுத்த..
7. கூட்டத்திற்காக அச்சிடப்படவுள்ள நோட்டீஸ் 50ஆயிரம். நோட்டீஸ் பெறும் ஒவ்வொரு உள்ளங்களிலும் தேவன் பேசி அழைத்து வர.
8. கூட்டத்திற்கு வரும் ஒவ்வொருவருக்கும் நன்றாக கேட்கக்கூடிய அளவில் மைக்செட் அமைப்பை அமைக்க தேவன் மைக்செட் சகோதரர்களுக்கு ஞானம் கொடுக்க.
9. சத்துருவின் வல்லமைகள் செய்திக்கு விரோதமாய் எழும்பாதபடிக்கு.
   அ. தேவதூதர்கள் மைதானம் எங்கும் உலாவ.
   ஆ. பரிசுத்த ஆவியானவர் வல்லமையாய் அசைவாட.
   இ. செய்தியை கேட்கிறவர்கள் கண்ணீரோடு மனந்திரும்ப..
   ஈ. காய்கனி மார்க்கட் மைதானம் தந்த பொறுப்பாளர்களுக்காய் தேவனை துதியுங்கள்.



   உ. மைதானத்தை தேவ ஆவியானவர் பொறுப்பெடுக்க.
   ஊ. மைதானத்தில் நடைபெற வேண்டிய பணிகள் தேவ ஞானத்தோடு செயல்பட.
10. பள்ளிகள் கல்லூரிகள் சந்திக்கப்படும்போது மாணவ மாணவிகளை அனுப்ப தேவன் திறந்த வாசலைத் தர
11. கூட்டத்திற்காக உழைக்கும் நமது ஊழியர்கள் ஒவ்வொருவரும் வியாதிப்படாது பாதுகாக்கப்பட.
12. நமது ஊழியர்கள் தன்னார்வ ஊழியர்கள் கூட்டம் காரியமாகவோ எதற்காகவோ பிரயாணம் செய்யும்போது பாதுகாக்கப்பட.
13. கூட்டத்திற்காக உழைப்போர் செயல்படுவோர் நடுவில் ஒருமனம் காணப்பட.
   அ. பிசாசானவன் ஒருமனதை உடைக்காமல் இருக்க.
   ஆ. கூட்டங்களுக்கு விரோதமான மனுஷ சக்திகள் கட்டப்பட.
   இ. கூட்டத்திற்கு விரோதமான பிசாசின் வல்லமைகள் கட்டப்பட.
   ஈ. கூட்டத்திற்கு போலீஸ் அனுமதி கிடைக்க.
   உ. சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் விரோதமாய் செயல்படாது இருக்க.
   ஊ. சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் செயல்பாடுகள் கூட்டத்திற்கு நல்ல அனுகூலமாய் மாற.
14. இசை வாசிக்கிறவர்கள் மேல் கர்த்தரின் அபிஷேகம் தங்க.
15. தன்னார்வ ஊழியர்கள் ஏராளம் எழும்ப.
16. வால்போஸ்டர்கள் பார்ப்பவர்களோடு கர்த்தர் பேசி அழைத்து வர.
   அ. விளம்பர போர்டுகள் வைக்கப்படும் இடங்களில் பாதுகாப்பாக இருக்கவும் பார்ப்பவர்கள் ஏராளம் வரவும்.
   ஆ. TV விளம்பரம் பார்ப்பவர்களோடு தேவன் பேசி கூட்டத்திற்கு அழைத்து வர ஜெபியுங்கள்.
17. எல்லா சபைகளிலும் நல்ல ஒத்துழைப்பு கிடைக்க ஜெபியுங்கள்.
18. எசேக்கியேல் 39:2இன்படி கர்த்தர் வாலிபர்களை மாணவர்களை திருப்பி அழைத்து வர.
19. எசேக்கியேல் 39:2இன்படி கர்த்தர் வாலிபர்களை, மாணவர்களை ஆறு துறடுகளால் இழுத்து வர.
20. ஓசியா 11:4இன்படி வாலிபர்களை, மாணவர்களை மனுஷரை கட்டி இழுக்கிற அன்பின் கயிறுகளால் கர்த்தர் இழுத்து அழைத்து வர.
21. ஓசியா 7:12இன்படி அவர்கள் போகும் போது கர்த்தர் தமது வலையை வீசி ஆகாயத்துப் பறவைகளைப் போல பிடித்துக் கொண்டு வரும்படியாக.
22. ஓசியா 11:8இன்படி எப்பிராயீமே நான் உன்னை எப்படிக் கைவிடுவேன் என கைவிடாது அழைத்து வர.
23. ஓசியா 14:4 இன்படி கூட்டத்திற்கு வரும் வாலிபர்களின் சீர்கேட்டை கர்த்தர் குணமாக்க.
24. நாகூம் 1:13இன்படி வாலிபர்களையும், மாணவர்களையும் நுகத்தை முறித்து கட்டுகளை அறுத்து அழைத்து வர.

25. செப்பனியா 3:18இன்படி சஞ்சலப்பட்ட வாலிபர்களையும், மாணவர்களையும் தேவன ஏகமாய் கூட்டிக் கொண்டு வர.
26. செப்பனியா 3.19அன்படி வாழ்வில் நொண்டியான, தள்ளுண்ட வாலிபர்களையும், மாணவர்களையும் கர்த்தர் சேர்த்து அழைத்து வர
27. ஆகாய் 2:8இன்படி வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்ற சேனைகளின் கர்த்தர் கூட்டத்தின் தேவைகளை சந்திக்க.
28. சகரியா 2:6 இன்படி ஓகோ என்று எழும்பி வாலிபர்கள், மாணவர்கள் ஒடி வந்து கூட்டத்தில் சேர.
29. சகரியா 8.5 இன்படி கூட்ட மைதானத்திலே ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் நிறைந்திருக்க.
30. சகரியா.10:8, ஏசாயா5:26 இன்படி கர்த்தர் வாலிபர்களை, மாணவர்களை பயில்காட்டி அழைத்து வர.
31. கூட்டத்தின் தேவை ரூ.3 ½ லட்சம் சந்திக்கப்பட.

அ. மேடை அமைக்க ஆகும் செலவை தாங்கும் நபர் எழும்ப.
ஆ. மேடை ஸ்கிரின் மற்றும் அமைப்புகளின் செலவை தாங்கும் நபர் எழும்ப,
இ. ஒலி, ஒளி அமைப்பு செலவை பொறுப்பெடுக்கும் நபரை தேவன் எழுப்ப,
ஈ. 50 ஆயிரம் நோட்டீஸ் அச்சிட ஆகும் செலவை சந்திக்கும் நபரைஎழுப்ப
உ. இரண்டு ஆயிரம் வால்போஸ்ட் அச்சிட ஆகும் செலவை சந்திக்கும் நபரை தேவன் எழுப்ப.
ஊ. பந்தல் அமைக்க ஆகும் செலவை சந்திக்கும் நபரை தேவன் எழுப்ப
எ. மைதானத்தில் வைக்கப்படும் T.Vகளின் மொத்த வாடகை செலவை பொறுப்பெடுக்கும் நபரை தேவன் எழுப்ப.
ஏ. விளம்பர போர்டுகள், பேனர்கள் சுவர் விளம்பரங்களின் செலவை பொறுப்பெடுக்கும் நபர் எழும்ப.

## குதூகல சிறுவர் முகாம்

இடம் : **தூய இம்மானுவேல் ஆலயம்,** தாளமுத்துநகர், தூத்துக்குடி

நாள் : **26-1-2013 சனிக்கிழமை (அரசு விடுமுறை)**

நேரம் : **காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை**

***நடத்துபவர்* : ஆத்தும ஆதாய இளைஞர் இயக்க குழுவினர், தூத்துக்குடி**

தொடர்பு : 9442120257, 9487848719, 9487640861

## குடும்ப மனமகிழ்ச்சி முகாம்

இடம் : **தூய இம்மானுவேல் ஆலயம்,** வாகைக்குளம், தூத்துக்குடி மாவட்டம்

நாள் : **16-1-2013 (அரசு விடுமுறை)**

நேரம் : **காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை**

***தேவ செய்தி* : சகோ. V. ஆசீர் இளங்கோ தம்பதியினர்**

**சகோ. V. மோகன்தாஸ் தம்பதியினர்**

தொடர்பு : 9442120257, 9442913156



# செய்திகள்

- தமிழகத்தில் மாமல்லபுரம், நீலகிரி இரயில் பாதை, தஞ்சை பெரியகோவில் உள்ளிட்ட 3 சோழர் கால கோவில்கள் ஆகிய 5 மட்டும் இதுவரை உலக பாரம்பரிய சின்னங்களாக மத்திய பண்பாட்டு அமைச்சகத்தால் பராமரிக்கப்படுகின்றன.
- உலக பாரம்பரிய சின்னங்களை தேர்வு செய்வது யுனெஸ்கோ என்ற உலக அமைப்பாகும்.
- தற்போது பழவேற்காடு ஏரி, கழுகுமலை பாறை சிற்பங்கள், செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, ஸ்ரீரங்கம் கோவில் மற்றும் செட்டிநாடு பகுதி ஆகியன ஐந்தும் மத்திய பண்பாட்டு அமைச்சகத்தால் யுனெஸ்கோவிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன.
- பழவேற்காடு ஏரி இந்தியாவின் 2வது பெரிய உப்பு நீர் ஏரியாகும். இது பூநாரைகூழக்கடா, நத்தை கொத்திநாரை போன்ற பறவைகளின் சரணாலயமாக திகழ்கிறது. இங்கு 50க்கும் மேற்பட்ட நீர்ப்பறவைகள் நிறைந்துள்ளது. இது450 சதுர கி.மீ பரப்பளவு கொண்டது.
- தூத்துக்குடி மாவட்ட கழுகுமலையில் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட பாண்டியர் கால வெட்டுவான் கோவிலின் கலை நுணுக்கங்கள் போற்றுதற்குரியது. 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சமண நினைவுச் சின்னங்கள் நிறைந்த இடமாய் திகழ்கிறது கழுகுமலை. 8 ஆம் நூற்றாண்டில் தழிழகத்தின் கல்விக்கூடமாய் திகழ்ந்திருக்கிறது கழுகுமலை.
- 108 வைணவ திருத்தலங்களில் முதன்மையானது ஸ்ரீரங்கம் இது 2000 ஆண்டு பழமையானது. சங்க இலக்கியத்தில் பாடப்பெற்ற தொன்மையான ஒன்று.
- 400 ஆண்டு கால வரலாற்றை சுமந்து நிற்கும் செயிண்ட் ஜார்ஜ் கோட்டை சென்னை மாநகர் உருவாக காரணமானது இக்கோட்டையில் தலைமைச் செயலகம், தமிழக சட்டமன்றம், ராணுவம் மற்றும் தொல்லியல் துறை அலுவலகங்கள் அருங்காட்சியகம், மற்றும் ஐரோப்பிய ஓவியங்கள் இங்கு உள்ளன.
- செட்டிநாடு என்று அழைக்கப்படும் காரைக்குடியை மையமாகக் கொண்டபகுதியில் வீடுகள் அனைத்தும் 1845-1950க்கள் கட்டப்பட்டவை. 120 அடி அகலம் 240 அடி வரை நீளம் கொண்டு பர்மா தேக்கினால் கட்டப்பட்டவை இந்திய சுதந்திரத்திற்குமுன் 8000 வீடுகள்இருந்தன தற்போது 6000 வீடுகள் உள்ளன.

**ஜெபியுங்கள்!**

தாதன்குளம் பணித்தளம் கிளாக்குளம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி. பேச்சியம்மாள் மகள் புனிதா (வயது 12) 20-12-2012 அன்று பள்ளி செல்லும் வழியில் விபரீதமாக மரணத்திற்கு உட்படுத்தப்பட்டாள். குடும்பத்தின் ஆறுதலுக்காக ஜெபியுங்கள்! தாயார் அதிர்ச்சியினால் சுகவீனமாக உள்ளார்கள். தேவன் குணமாக்க ஜெபியுங்கள்.

## புத்தாண்டுக்கான ஜெபம்

தொகுப்பு : சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்

1. **சங். 65:11இன் படி** தேவரீர் வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்ட ஜெபிக்கிறோம்.
2. **உபா. 11:12இன்படி** எங்கள் தேசம் எங்கள் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசமாகவும், வருஷத்தின் துவக்க முதல் வருஷத்தின் முடிவு மட்டும் எப்பொழுதும் எங்கள் தேவனாகிய கர்த்தருடைய கண்கள் எங்கள் தேசத்தின் மேல் வைக்கப்பட்டிருக்க ஜெபிக்கிறோம்.
3. **சங். 90:12இன்படி** தேவனே, நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகுமபடி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும். என்று ஜெபிக்கிறோம்.
4. **சங். 90:14இன்படி** இந்த வருடத்தில் ஒவ்வொரு நாளும் நாங்கள் களிகூர்ந்து மகிழும் படி எங்களை தேவரீர் உமது கிருபையால் திருப்தியாக்கும். என்று ஜெபிக்கிறோம்.
5. **சங். 90:15 இன்படி** தேவரீர் எங்களைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கும். நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும். என்று ஜெபிக்கிறோம்.
6. **எபே. 5:15,16 இன்படி** தேவனே நாங்கள் ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனபடுத்திக் கொள்ள எங்களுக்குப் போதியும் என்று ஜெபிக்கிறோம்.
7. **உபா. 14:22 இன்படி** நாங்கள் தேவனாகிய கர்த்தருக்கு எப்பொழுதும் பயந்திருக்கப் பழகும்படிக்கு, வருஷமுழுவதும் எங்களுடைய வருமானத்திலெல்லாம் உண்மையாய் தசம பாகத்தை செலுத்த உதவிச் செய்ய ஜெபிக்கிறோம்.
8. **சங். 77:10இன்படி** நாங்கள் உன்னதமான தேவனின் வலதுகரத்தில் இந்த வருஷ முழுவதும் உள்ளது என்ற உணர்வோடு விசுவாசத்தோடு வாழ கிருபை செய்ய ஜெபிக்கிறோம்.
9. **சங். 102:24, நீதி. 9:11 வசனங்களின்படி** தேவனே எங்கள் ஆயுசின் வருஷங்கள் தலைமுறை தலைமுறையாய் இருக்கவும் பாதி வயதில் எடுத்துக்கொள்ளப்படாமல் பாதுகாக்கப்பட்டு உம்மாலே எங்கள் நாட்கள் பெருக உம்மாலே எங்கள் ஆயுசின் வருஷங்கள் விருத்தியாக ஜெபிக்கிறோம்.
10. **ஏசாயா 61:2, 63:4 வசனங்களின் படி** இந்த ஆண்டு கர்த்தருடைய அநுக்கிரக வருஷமாகவும், எங்கள் தேவனாகிய நீர் நீதியைச் சரிக்கட்டும் நாட்களாகவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யும் காலமாகவும், உம்முடைய ஜனமாகிய எங்களை மீட்கும் இக்கட்டுக்கு விலக்கி காக்கும் வருஷமாகவும் இருக்க ஜெபிக்கிறோம்.
11. **யோவேல் 2:25இன்படி** எங்கள் வாழ்வில் உம்முடைய நீதியினால் நீர் எங்களிடத்தில் அனுப்பின உம்முடைய பெரிய சேனையாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை, பலனை தேவனே நீர் எங்களுக்குத் திரும்ப அளிக்கும் வருஷமாயிருக்க ஜெபிக்கிறோம்.
12. **ஆபகூக் 3:2, லூக்கா 13:8 வசனங்களின்படி** கர்த்தாவே, இந்த வருஷத்தில் உம்முடைய கிரியைகளை உயிர்ப்பியும். இந்த வருஷத்தில் அதை விளங்கப் பண்ணும். நீர் கோபித்தாலும் உமது இரக்கத்தை நினைத்தருளும். எங்களை மன்னித்து கனிகொடா எங்கள் வாழ்வை கனி கொடுக்கும் வாழ்வாக மாற்ற எங்களைச் சுற்றிலும் கொத்தி எருபோட்டு சுத்தமாக்கி, சுத்திகரித்து கனி உள்ளவர்களாக மாற்றும். என்று ஜெபிக்கிறோம்.



**ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கம்,**
**தேவனுடைய கூடார ஊழியங்கள்**
**கிருபையின் ஊழியங்கள்**
**ஜெபப்பங்காளர்கள் தாங்குவோர் யாவருக்கும்**
**உங்கள் குடும்பத்தினர் யாவருக்கும்**
**நமது மிஷனெரிகளின் புத்தாண்டு வாழ்த்துக்கள்! ஜெபங்கள்!**

**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**

*தேவனுடைய கூடாரத்தில்*

## திறப்பின் வாயில் ஜெபம்

**2013 ஜனவரி 30 கடைசி புதன் – காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

*நீங்களும் வாருங்கள்!* *கலந்து கொள்ளுங்கள்!* *இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!*

*நேரில் கலந்து கொள்ள முடியாதவர்கள் உங்கள் ஜெப விண்ணப்பங்களை எங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியில் அனுப்பலாம்.*

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை–626 201. போன் 04562–258194

## *தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்*

**நாள் : 2013 ஜனவரி 29 – கடைசி செவ்வாய்**
**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**
**இடம் : காமராஜர் திருமண மண்டபம்,**
**பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.**

### *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.